செ.வெ.எண்:-831

<u>தகவல் தொழில்நுட்பவியல் துறை</u>

நாள்:-28.9.2010.

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>வணிகவரித் துறைக்கான வலைத்தள மென்பொருள் வெளியீடு</u>

தமிழகஅரசு, குடிமக்களுக்கு வழங்கி வரும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்திட, தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) பயன்படுத்தி சிறப்பான சேவைகளை வழங்கிவருகிறது.

தமிழக அரசின் கீழ் இயங்கி வரும் வணிகவரித் துறை பொதுமக்களை மையமாகக் கொண்டு பல சேவைகளை வழங்கி வருகிறது. இத்துறை அரசின் வருமானத்தை அதிகரிக்கும் மைய ஆதாரமாகவும் திகழ்கிறது. தற்போது இத்துறையின் பயன்பாட்டிலிலுள்ள மென்பொருளில், உள்தரவுதளத்தில்(Local Database) பதிவு செய்த விவரங்களை இணையத்தில் ஏற்றம் செய்வதற்கான வசதி இல்லை . இந்த செயல்முறையை சீரமைக்கும் விதமாக, ஒரு சிறப்பான வலைத்தள மென்பொருளை தயாரித்திட அரசு, எல்காட் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் விப்ரோ நிறுவனத்தின்மூலம் உருவாக்கியுள்ளது.

இம் மென்பொருளின் சிறப்பம்சங்கள்:

- தனியுரிமை (Proprietory) மென்பொருளைக் கொண்டு தயாரிக்காமல் திறந்த ஆதார வளர்ச்சி (Open Source) கருவி மற்றும் தரவுதளத்தில் உருவ்வாக்கப் பட்டுள்ளது. இதனால் இந்த மென்பொருளை வாங்குவதற்கு உரிமம் எதுவும் தேவையில்லை.

- பழைய மென்பொருளில் இணைய வழி பயன்பாடில்லை. தற்போது உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் இணையவழி பயன்பாட்டுடன் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, எந்த விதமான மென்பொருள் தொகுப்புகளோ, புதிய பதிப்புகளோ மற்றும் தரவுத்தளங்களையோ அலுவலகத்திலிருக்கும் கணினிகளில் நிறுவ வேண்டிய அவசியமில்லை.

- தரவுதளம் மையக்கட்டுப்பாட்டின் கீழ் இயக்கப்படும்.

- பணியாளருக்கு தேவையான முன்னுரிமைகள் இந்த மென்பொருளில் வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, கணினி உதவியாளர் பயனர் இந்த மென்பொருளிலிருந்து வருமான வரி செலுத்துபவரின் அடையாள எண்ணை தயார் செய்ய முடியாது. இந்த உரிமை தலைமை அலுவலக பயனருக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் எந்த பயனருக்கும் எந்த விதமான பணியினையும் வரையறுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இணையத்துடன் இணைந்துள்ள அனைத்து அலுவலக கணினிகளிலும் தரவுகளை உள்ளீடு செய்ய முடியும். ஆனால் பழைய மென்பொருளில் அந்த கணினியில் அம்மென்பொருள் நிறுவப்பட்டிருந்தால் மட்டுமே தரவுகளை உள்ளீடு செய்ய முடியும்.

- பதிவு செய்தவுடன் வருமான வரி செலுத்துபவரின் அடையாள எண்ணை உடனடியாக சரிபார்க்க முடியும்.

- பதிவு சான்றிதழ்களை உடனடியாக ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு மாற்றம் செய்ய இயலும்.

- பதிவு செய்தவுடன் அவ்விடத்திலேயே சரிபார்க்கும் வசதியையும் உள்ளடக்கியது.

- சட்டபூர்வமான படிவங்களை (Statutory) இணையத்தில் பதிவேற்றம் செய்வதும் இந்த மென்பொருளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு தரவும் உள்ளீடு செய்யும் நேரம் பதிவு செய்யப்படுகிறது.

- மறுதணிக்கைக்கான மேம்படுத்தப்பட்ட பதிப்பை கொண்டுள்ளது.

- பிராந்தியம் (Territorial) மற்றும் சோதனைச் சாவடிக்கான (Check post) தொகுப்புகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

- முன்னதாகவே சோதனைச்சாவடிகளில் வசூலிக்கப்படும் வரி விவரங்கள் தானாகவே பிராந்திய தொகுப்புகளில் பிரதிபலிக்கும்.

- வருமான வரி செலுத்துபவரின் அடையாள எண் விவரங்கள் சோதனைச் சாவடிகளில் உடனடியாக சரிபார்க்க இயலும். இதனால் வணிகர்களின் விவரங்களை கணினி மையத்திலிருந்து சோதனைச் சாவடிகளுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை.

- மின்கோப்பு தரவுகள் தன்னியக்கமாக தேசிய தகவல் மைய சேவைகயகத்திலிருந்து வணிகவரி சேவையகத்திற்கு இடம்பெயர்ந்து விடும்.

- அனைத்து விதமான மின் மறு தரவுகளை அதன் இணைப்புகளுடன் பார்க்க இயலும்.

இம்மென்பொருளை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்களுடன் இணைந்து 28.09.2010 அன்று காலை 11.30 மணியளவில் தலைமைச் செயலக பழைய கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மை செயலாளர் திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., வணிகவரித் துறை செயலாளர் திரு. முகமது நசிமுதின், இ.ஆ.ப., வணிகவரித் துறை ஆணையர் திரு.வி.கே. ஜெயக்கொடி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., தேசிய தகவல் மையம், வணிகவரித் துறை, எல்காட் நிறுவனம் ஆகியவற்றை சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் விப்ரோ நிறுவனத்தினர் பங்கேற்றனர்.

பி.டபிள்யூ.சி. டேவிதார்
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

P.R. No:- 831 நாள்:.28.9.10.

**Information Technology Department**

# PRESS RELEASE

## Launch of Web Application Software for Commercial Taxes Department

In order to enhance the quality of the services offered to its citizens, the Government of Tamil Nadu is involved in harnessing Information Communication Technology (ICT) to the maximum.

The Commercial Taxes Department under the control of Government of Tamil Nadu is offering many Citizen Centric Services. This Department is also one of the main source of revenue augmentation to the Government. At present, the application put in to use in this Department does not have the on-line facility for uploading the data. In order to reengineer the business process, the Government decided to develop a Web Application Software using current technologies in place of the existing software. The new Web Application Software has been developed by WIPRO in coordination with ELCOT.

The salient features of the software :

- Developed in Open Source Development Tools and Database. As such no need for purchase of Licensed Software.
- The application developed is a Web enabled Software whereas the old Software is Client-Server (offline) based.
- Centralized control of database.
- The set of privileges granted for each user will be defined in the Software. For example, the System Assistant User cannot generate TIN from the Software and it can be done only by Head Office User. Similarly, any operation can be designated to any user.
- All Systems connected to the internet in the office can be used for data entry whereas old Software will function only if it is installed in the local system.
- The reference TIN in the Registration can be checked instantly.
- Immediate transfer of RC from one office to the other office.
- Spot verification included in the Registration.

- Uploading of Statutory usage forms integrated with the Software.

- Recording of Time for every data entry.

- Enhanced version of Return Audit.

- Integration of Territorial and Check post packages.

- Advance Tax collected in the Check posts gets automatically reflected in the Territorial package.

- In Check posts, validation of TIN is done instantly. No need for sending Dealer details from Computer Centre to Check Posts periodically.

- Automatic migration of e-file data from NIC Server to Commercial Taxes Server.

- Viewing of e-Return data for all types ( I, J, Form 1 etc.) along with Annexure in the assessment circles and only confirmation of payment details is to be entered in the Software.

This Software was launched by Thiru S.N.M. Ubayadullah, Hon'ble Minister for Commercial Taxes along with Dr. (Tmt) Poongothai, Hon'ble Minister for Information Technology on 28.9.2010 at 11.30 A.M. at the Conference Hall, II Floor, Old Building, Secretariat, Chennai 600 009. Thiru P.W.C. Davidar, I.A.S., Principal Secretary to Government, Information Technology Department, Thiru Md. Nasimuddin, I.A.S., Secretary to Government, Commercial Taxes Department, Thiru V.K. Jeyakodi, I.A.S., Commissioner Commercial Taxes Department, Dr . Santhosh Babu, I.A.S., Managing Director, ELCOT and Senior Officers from National Information Centre, Commercial Taxes Department, ELCOT along with M/s. Wipro participated in this event.

**P.W.C. Davidar**
**Principal Secretary to Government**

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9